கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2017/2018 (நவம்பர்/டிசெம்பர் 2019)

# SAS 3243 Rural Sociology

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி-I இல் இருந்து இரண்டு வினாக்களும் பகுதி-II இல் இருந்து மூன்று வினாக்களும் மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க.

## பகுதி – I

01. (அ) சமூகவியல் (Sociology) சமூக மானுடவியல் (Social Anthropology) இவற்றோடு கிராமிய சமூகவியல் பூண்டுள்ள உள்ளார்ந்த தொடர்புகளை தர்க்க ரீதியில் மிகச் சுருக்கமாகத் துலக்கிக் காட்டுக.

(12 புள்ளிகள்)

(ஆ) கிராமிய சமூகவியல் புலப்படுத்தி நிற்கின்ற அதனது அடிப்படைக் குணாம்சங்களை (Characteristics) சுருக்கமாக விபரிக்குக.

(08 புள்ளிகள்)

02. (அ) கிராமிய சமூகவியலின் முறைகள் (Methods) மற்றும் அதன் உபகரணங்களை (Tools) மிகச் சுருக்கமாக எடுத்துக் காட்டுக.

(12 புள்ளிகள்)

(ஆ) M.N.ஸ்ரீநிவாஸ் பேசும் "சமஸ்கிருதமயமாதலின்" (Sanskritisation) மிகப்பிரதான குணப்பண்புகளைக் குறிப்பிட்டு, இவ்வெண்ணக்கரு மீது முன்வைக்கப்படும் விமர்சனங்களையும் சுருக்கமாக எடுத்துரைக்க.

(08 புள்ளிகள்)

03. (அ) கிராமிய வாழ்வியல் அம்சங்களின் ஊடாக முனைப்புற்று வெளிப்படும் சமூகவியல் தன்மைகள் பற்றிச் சுருக்கமாக எடுத்துரைக்க.

(10 புள்ளிகள்)

(ஆ) விவசாயச் சமூகக் கட்டமைப்பு (Agrarian Social Structure) என்பதனால் நீர் விளங்கிக்கொள்வது யாது? சுருக்கமாக விடை தருக.

(10 புள்ளிகள்)

## பகுதி – II

04. கிராமிய சமுதாயங்களின் அடிப்படைக் குணாம்சங்களை விஞ்ஞானபூர்வமாகப் படிப்பதற்குரிய புலமைத்துவ ரீதியிலான அடிப்படைச் சட்டகம் (Frame Work), கோட்பாட்டியல் பின்புலத்தை ஸ்தாபிப்பதில் Tonniess ஆற்றிய வகிபாகத்தினை விரிவாக மதிப்பீடு செய்க.

(20 புள்ளிகள்)

05. "கிராமியத்துவம் (Rurality) சமுதாயக் கட்டொருமைப்பாடு"(Social Solidarity/Communal Solidarity) என்பன தொடர்பில் Tonniess Emile Durkheim Max Weber மூவரதும் தத்துவார்த்தக் கருத்தியல்வார்ப்புகளில் புலப்படும் ஒற்றுமை, வேற்றுமைகளின் தாரதம்மியத்தை சமூகவியற் பாங்கில் விரிவாக விவாதிக்குக.

(20 புள்ளிகள்)

06. பண்ணைக்குடிச் சமூகங்களின் (peasant Societies) அசைவியக்கம் பற்றிய கற்கை மிகுந்த முக்கியத்துவம் பெறுவது, இதன்படி தென்னாசிய வட்டகையில் கிராமிய சமுதாய இருப்புக்குப் பெயர் பெறும் இந்தியாவில் இடம்பெற்ற பின்வரும் நிகழ்வுகளின் பின்புலம், அதன் விளைபேறுகள் பற்றி விரிவாகக் கலந்துரையாடுக.

(அ) பஞ்சாப் பண்ணைக்குடிப் புரட்சி (Peasant Revolt in punjab) - (1930)

(ஆ) தெலுங்கானா பண்ணைக்குடிச் சர்ச்சை (Telangana ponsant struggle)

(இ) நக்ஸல்பாரி பண்ணைக்குடிச் சர்ச்சை (Naxalbari pensant struggle)

(20 புள்ளிகள்)

07. தற்போதைய உலகமயமாதற் சூழலில் கிராமியப் பண்பாடு, விழுமியங்கள், வழக்காறுகள் குறிப்பிடத்தக்களவு மாறியுள்ளனவா இல்லையா என்பது தொடர்பான விவாதத்தில் இரண்டு கருத்து நிலை சார்பிலும் உமது வலுவான வாதீடுகளை வலுவாக முன்வைத்து விரிவாகக் கலந்துரையாடுக.

*****